தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.05.2013 A.M**

---

## வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி

வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது.

தமிழகத்திலிருந்து சுமார் 1000 கிலோ மீட்டர் தொலைவில் உருவாகியுள்ள இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தற்போது ஆரம்ப நிலையில் உள்ளது. இன்னும் ஒரிரு நாள்களில் அது வலுப்பெறும் என வானிலை மையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சில வாரங்களுக்கு முன் அந்தமான் அருகே உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவடைந்து "மகாசேன்' புயலாக மாறியது. இதன் மூலம் தமிழகத்தில் கணிசமான அளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புயல் திசை மாறி மியான்மர் அருகே கரையைக் கடந்தது.

இந்த நிலையில், கோடை வெயிலால் மாநிலத்தின் முக்கிய நீர் ஆதாரங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால், அடுத்து வரும் மாதங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

எனவே, வங்கக் கடலில் தற்போது புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தில் சில நாள்களுக்காவது மழை பெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:வங்கக் கடலின் வட மேற்குப் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது வலுவடைந்து, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாற வாய்ப்புகள் உள்ளன. தாழ்வுப் பகுதி வலுவடையும் பட்சத்தில் அது நகரும் திசையைப் பொருத்தே மழை வாய்ப்பு குறித்து கூற முடியும்.

இருப்பினும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால் தமிழகத்தில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்: அனைத்து விவசாயிகளும் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படுமா?

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்கும் அனைத்து விவசாயிகளுக்கும் மாவட்ட நிர்வாகம் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாந்தோறும் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்படுகிறது. கூட்டத்தில், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொள்கின்றனர். ஆனால், தங்களின் கருத்துகளை மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்க முடிவதில்லை என்பது பெரும்பாலான விவசாயிகளின் குறையாக உள்ளது.

முன்வரிசையில் அமர்ந்திருக்கும் குறிப்பிட்ட சிலர் மட்டுமே அனைத்துக் கூட்டத்திலும் பேசுகின்றனர். அவர்கள் மட்டுமே பேசுவதானால், அவர்களை வைத்தே இந்த கூட்டத்தை மாவட்ட நிர்வாகம் நடத்திக் கொள்ளலாம். எங்கள் வேலைகளை விட்டுவிட்டு, தொலைதூரத்திலிருந்து நாங்கள் வருகிறோம். கூட்டத்துக்கு வந்தால், பெரும்பாலான விவசாயிகள் தங்கள் கருத்துகளை தெரிவிக்க முடியாமல், பிறர் பேசுவதை வேடிக்கைப் பார்த்துச் செல்லும் நிலையே உள்ளது.

குறைந்தபட்ச நேரம்:

அனைத்து விவசாயிகளும் தங்களின் கருத்துகளை தெரிவிக்கும் வகையில், ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச நேரம் ஒதுக்கீடு செய்வதற்கு, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை மட்டுமே பேச மாவட்ட நிர்வாகம் அனுமதிக்க வேண்டும் என கடந்த கூட்டங்களின் போது வாய்ப்பு கிடைக்காத விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை (மே 30) விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், கடந்த கூட்டத்தின்போது அளிக்கப்பட்ட மனுக்களின் மீது விவாதம் நடைபெற உள்ளது. எனவே, கூட்டத்தில் பங்கேற்று தங்களுக்கான பதிலை விவசாயிகள் அறிந்து கொள்ளலாம், என ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## வறட்சி நிவாரண நிதியை விரைவில் வழங்கக் கோரிக்கை

வறட்சி நிவாரண நிதியை விரைவில் வழங்க அரசு நடவடிக்கை வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியர் ரேஷ்மி சித்தார்த் ஜெகதே தலைமையில் விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், பொள்ளாச்சி மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் பல ஆயிரம் ஏக்கரில் தென்னை உள்ளிட்ட பயிர்கள் விவசாயம் செய்யப்படுகிறது.

பருவ மழை பொய்துப்போனதால் பொள்ளாச்சி பகுதியில் அதிக வறட்சி நிலவி வருகிறது. இதன் காரணமாக தமிழக அரசு அறிவித்த நிவாரண நிதிக்கான கணக்கெடுப்பு சரிவர நடத்தப்படாததால் நிவாரண நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இதனால், விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு தாலுகா பகுதியில் வறட்சி நிவாரண நிதி விரைவில் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

மெடிக்கல் பரமசிவம் பேசுகையில், வறட்சி நிவாரண நிதிக்கான கணக்கெடுப்பில் மானாவாரி விவசாயிகள் குறித்து சரியாக கணக்கிட வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயி இல்லாதபோது அந்த விவசாயியின் வாரிசுக்கும், பாதிக்கப்பட்ட நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் விவசாயிக்கும் நிவாரண நிதி செல்கிறதா என்பதை வருவாய்த் துறை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்றார்.

திப்பம்பட்டி ஆறுச்சாமி பேசுகையில், ஒருதலைப்பட்சமாக கணக்கெடுப்பு நடத்தக் கூடாது. செங்குட்டைப்பாளையம் கிராமத்தில் தனியார் ஒருவர் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்லும் சாலையை ஆக்கிரமித்துள்ளார். அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்றார். விவசாயிகள், அனைத்துத் துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு ரூ.11.56 லட்சம் நிவாரண நிதி

பெரியநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டுறவு சங்கத் தலைவர் குருந்தாசலம் வரவேற்று பேசினார். மேட்டுப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினர் ஓ.கே.சின்னராஜ், பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி. அருண்குமார் முன்னிலை வகித்தனர். கவுண்டம்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி,

நரசிம்மநாயக்கன்பாளையம், பெரியநாயக்கன்பாளையம், கூடலூர் பகுதியைச் சேர்ந்த மானாவாரி விவசாயிகள் 276 பேருக்கு முதல்கட்டமாக ரூ.11.56 லட்சம் வழங்கிப் பேசுகையில், தமிழக அரசு வேளாண் தொழிலை முதன்மையாகக் கருதி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வரும் நிதி ஆண்டில் 50 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்க 6,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

முன்னாள் ஒன்றியத் தலைவர் கோவனூர் துரைசாமி, வேளாண் உதவி இயக்குநர் ஷபிஅகமது, நிலவள வங்கித் தலைவர் ரங்கராஜ், பேரூராட்சி துணைத் தலைவர்கள் செல்வராஜ், சந்திரன், வங்கி துணைத் தலைவர் பழனிசாமி மற்றும் வங்கி இயக்குநர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். வங்கி செயலர் டி.பாக்கியம் நன்றி கூறினார்.

## "மேற்கிலிருந்து வீசும் காற்றால் பகல் வெப்பம் குறையும்

மேற்குத் திசையிலிருந்து வீசும் அதிகப்படியான காற்றால் பகல் வெப்ப அளவுகள் சற்று குறையக்கூடும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (மே 29 முதல் மே 31 வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் 5 மிமீ முதல் 6 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 77 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 100.4 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 35 சதம் முதல் அதிகபட்சம் 71 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: தென்மேற்குப் பருவமழைக் காலம் தொடங்குவதற்கு தொடர்ந்து சாதகமான தட்பவெப்பநிலை நிலவுகிறது. மேற்கிலிருந்து வீசும் சற்று அதிகமான காற்று பகல் வெப்பத்தை சிறிதளவு குறைத்து 100.4 டிகிரி பாரன்ஹீட் அளவில் நிலவ வைக்கிறது.

இதனால், கோழிகளிடையே வெப்ப அயற்சி குறைய வாய்ப்புள்ளது.

இருப்பினும், கோடை மழை அதிகமாக பெய்யாத காரணத்தால் குறைந்த வெப்ப அளவு அதிக நேரம் நீடிக்கவும், ஜூன் மாதத்தில் வெப்பத்துக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவைப்படும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:மரவள்ளியில் இலைப்புள்ளி நோய் பரவலாக காணப்படுவதால் இந்த நோய் பரவுவதைத் தடுக்க சாஃப் என்ற பூஞ்சான கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து மற்றும் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை இலை வழியாக தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மே 31-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற வெள்ளிக்கிழமை (மே 31) காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில், மாவட்டத்திலுள்ள விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளை நேரடியாகவும், மனுக்கள் வாயிலாகவும் தெரிவித்து நிவாரணம் பெற அறிவுறுத்தப்படுகிறது.

## வாழை இலை தட்டுப்பாடு: பிளாஸ்டிக் இலைகளுக்கு மாறும் உணவகங்கள்

வாழை இலைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் புதுகையில் உணவகங்கள் மற்றும் பொதுமக்கள் பிளாஸ்டிக் இலையைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

வீட்டுக்கு வந்த விருந்தினர்களுக்கும், திருமணம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் உணவு படைப்பதில் முக்கிய பங்கு வகிப்பது வாழை இலையே. அதற்கு எப்போதும் தனி மதிப்பும், இடமும் உண்டு. இன்னமும் சில வீடுகளில் மூன்று வேளையும் வாழை இலையையை உணவருந்தப் பயன்படுத்தும் முறை வழக்கத்தில் உள்ளது.

ஆனால் உணவகங்களில் வாழை இலையின் பயன்பாடு பிரதானம் என்பதைவிட கட்டாயமானது. உண்பவரின் சுகாதாரம் பேணப்படுவதுடன், தொற்று நோய் போன்ற புற ஆபத்துகளைத் தவிர்க்க முடியும் என்பதே இதற்கு முக்கிய காரணம். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் உணவகங்களில் பிளாஸ்டிக் (கம்ப்யூட்டர்) இலைகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய வறட்சியிலிருந்து வாழை போன்ற தோட்டப்பயிர்களும் தப்பவில்லை.

இதனால் உணவகங்களுக்கும், பொதுமக்களுக்கும் நியாயமான விலையில் காலம் காலமாக கிடைத்து வந்த வாழை இலைக்கு தற்போது கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு ஒரு இலை ரூ. 1 முதல் 2 வரையிலும், உணவகங்களுக்கு ரூ. 1.50 முதல் 2 -க்கும் கிடைத்து வந்த இலை தற்போது பொதுமக்களுக்கு ரூ. 4 முதல் 5 வரையிலும், உணவகங்களுக்கு ரூ. 6 முதல் 7 வரையும் விலை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டையிலுள்ள உணவக நிர்வாகி ந. குமரகுரு கூறியது:

உணவகங்களுக்கு வாழை இலைதான் முகவரி. அதை உணவகம் தொடங்கியது முதலே பயன்படுத்தி வந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, வரலாறு காணாத விலையேற்றத்தால் வாழை இலையைத் தவிர்த்து, பிளாஸ்டிக், பேப்பர் இலைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.  உணவக வரலாற்றில் இவ்வாறு நடப்பது இதுவே முதல் முறை என்றார்.

இலை வியாபாரி என். கோபு கூறியது:

திருச்சி, லால்குடி, திருக்காட்டுப்பள்ளி, நடுக்காவிரி, குளித்தலை, பேராவூரணி போன்ற பகுதிகளில் இருந்து புதுக்கோட்டைக்கு வாழை இலைகள் கொள்முதல் செய்யப்படுவது வழக்கம்.

ஆனால் தற்போது அப்பகுதிகளில் ஏற்பட்ட கடும் வறட்சியால் வாழை சாகுபடி குறைந்து போனது. கிணறுகளை நம்பி சாகுபடி செய்யப்பட்ட வாழைப் பயிர்கள் அண்மையில் வீசிய சூறைக்காற்றால் அழிந்து போனதால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

ஆனால், எங்களது வாடிக்கையாளர்களைச் சமாளிக்க வேண்டியுள்ளதால் தற்போது மதுரை மற்றும் மேலூர் பகுதிகளில் இருந்து வாழை இலைகளை அதிக விலைக்கு கொள்முதல் செய்கிறோம். இதனால்தான் வாழை இலை தற்போது 4 மடங்கு விலை உயர்ந்ததுடன் வியாபாரமும் குறைந்துவிட்டது. சிறிய வியாபாரிகள்  வியாபாரத்தைக் கைவிடும் நிலையும் அதிகரித்துள்ளது. இது 3 மாதங்களில் சரியாகும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து வாழை விவசாயி ஜி.எஸ். தனபதி கூறியது: புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை பல ஆண்டுகளுக்கு முன் சுமார் 1000 எக்டேரில் வாழைச் சாகுபடி நடைபெற்றது. ஆனால், வாழை சாகுபடிக்கு போதிய ஊக்கமளிக்கப்படாததால் தற்போது 400 எக்டேராகக் குறைந்துவிட்டது. இம்மாவட்டத்தில் வாழை சாகுபடியை அதிகரிக்கும் வகையில் காப்பீடு வசதி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்கும் தொழில்களை ஊக்குவிக்க தீவிர நடவடிக்கை தேவை. இதனால் மாவட்டம் தன்னிறைவு பெறுவதுடன், வெளி மாவட்டங்களில் இருந்து வாழை இலை கொள்முதல் செய்ய வேண்டிய நிலைமையும் மாறிவிடும். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள

அசாதாரண சூழ்நிலையை சமாளிக்க மாற்றுவழிகளை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

## விவசாயிகள் கற்றறிவுப் பயணம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் ஆத்மா திட்டத்தின் கீழ் சனிக்கிழமை கற்றறிவுப் பயணம் மேற்கொண்டனர்.

திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற மாநில அளவிலான நெல் திருவிழாவில் பங்கேற்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

வேளாண் வணிகப்பிரிவு துணை இயக்குநர் அண்ணாமலை கொடியசைத்து தொடக்கி வைத்தார். ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர்கள் பெ. உதயக்குமார், கோ. ராமமூர்த்தி, வேளாண் அலுவலர்கள் ரா. ஜெகதீஸ்வரி, எஸ். அன்பரசன் ஆகியோர் செய்தனர்

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 19.16 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 19.16 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

## சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் பயன்பெற ஜூன் 1-ல் சிறப்பு முகாம்

பெரம்பலூர், வேப்பந்தட்டை வட்டத்தில் சொட்டுநீர் பாசன திட்டத்தின் கீழ் பயன் பெற ஜூன் 1-ம் தேதி சிறப்பு முகாம் நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் மற்றும் வேளாண்மை பயிர்களுக்கு, சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரை 100 சதவித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவித மானியமும் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற சிறப்பு ஆலத்தூர் மற்றும் குன்னம் வட்டாட்சியர் அலுவலகங்களில் கடந்த 25-ம் தேதி சிறப்பு முகாம்கள் நடைபெற்றன.

வேப்பந்தட்டை மற்றும் பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் ஜூன் 1-ம் தேதி சொட்டுநீர் பாசனம் அமைக்க உள்ள விவசாயிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. முகாமில், விவசாயிகளுக்கு தேவையான கணினி சிட்டா, அடங்கல், சிறு, குறு விவசாயிகளுக்கு சான்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

எனவே, சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்களது குடும்ப அட்டை நகல், 3 பாஸ்போர்ட் புகைப்படங்களுடன் கலந்து கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

## "விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு தொகையை அதிகரிக்க வேண்டும்'

பேரிடர் காலத்தில் நாசமாகும் பயிர்களுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையாவுக்கு அந்த மாநில வேளாண் துறை இணையமைச்சர் கிருஷ்ணபைரே கெப்டா வேண்டுகோள் விடுத்தார்.

பெங்களூர் விதானசெப்தாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு கிருஷ்ணபைரே கெப்டா பேசியது:

பேரிடர் காலத்தில் பயிர் நாசமடைந்தால், அதற்கான இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு அளித்து வருகிறோம். ஆனால், பயிர் நஷ்டத்திற்கு ஈடாக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. பயிர் இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.300 முதல் ரூ.2 ஆயிரம் வரை வழங்குகிறோம். இந்தத் தொகை விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை சரி செய்துவிட முடியாது. பயிர் இழப்பீட்டுக்கு வழங்கப்பட்ட தொகை சுமார் ரூ.120 கோடி மாவட்ட ஆட்சியர்களிடமே உள்ளது. இந்தத் தொகை போதுமானதல்ல. முதல்வர் சித்தராமையா, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது சட்டப்பேரவையில் இந்தப் பிரச்னை குறித்து பேசினார். எனவே, பயிர் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கும்படி முதல்வர் சித்தராமையாவை கேட்டுக்கொள்கிறேன் என்றார் அவர்.இதற்கு பதிலளித்து முதல்வர் சித்தராமையா பேசியது: பயிர் இழப்பீடு வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல்கள் மத்திய அரசு வகுத்தவை. இதில், மாநில அரசு என்ன செய்ய முடியும் என்பதை ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.பயிர் இழப்பீட்டுத் தொகை குறைவு என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். இதை உயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது. இதுகுறித்து விவாதித்து முடிவெடுப்போம் என்றார் அவர்.

இன்றைய வேளாண் செய்திகள்

29.05.2013 A.M

## கடையநல்லூர் பகுதியில் அணைகளில் தண்ணீர் தட்டுப்பாடால் விவசாயிகள் தயக்கம்

கடையநல்லூர்:கடையநல்லூர் பகுதியில் அணைகள் அனைத்தும் வறண்டு காணப்பட்டு வரும் நிலையில் கார்சாகுபடி மேற்கொள்வதில் விவசாயிகள் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர். பிசான சாகுபடியும் ஏமாற்றிவிட்ட நிலையில் கார் சாகுபடியும் பொய்த்துவிடுமோ என்ற ஏக்கத்தினால் விவசாயிகள் பெரும் ஆதங்கத்துடன் காணப்பட்டு வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் கோடை மழை பொய்த்துவிட்ட நிலையில் வறட்சி மாவட்டமாக நெல்லை மாவட்டமும் அறிவிக்கப்பட்டது. இதனிடையில் கடையநல்லூர் தொகுதியை பொறுத்தவரை சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பிசான சாகுபடி நிலங்கள் போதுமான பருவமழையின்றி தரிசாக விடப்பட்டன. இத்தொகுதியில் உள்ள கருப்பாநதி, அடவிநயினார், குண்டாறு ஆகிய அணைகளுக்குட்பட்ட பாசன விவசாயிகள் பிசான சாகுபடியை போதுமான முறையில் மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். அணைப்பகுதியை ஒட்டியுள்ள விவசாயிகள் கூட விளைந்த பயிரை அறுவடை செய்ய பெரும்பாடுபட்டனர்.

இதனிடையில் தற்போது இத்தொகுதியில் உள்ள கருப்பாநதி அணை முற்றிலுமாக வறண்டு வரும் ‹ழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அடவிநயினார் அணைக்கட்டின் நீர்மட்டமும் இதே நிலையில் தான் காணப்பட்டு வருகிறது. குண்டாறு அணைக்கட்டை பொறுத்தவரை கார்சாகு போதுமான தண்ணீர் இல்லாத நிலைதான் இருந்து வருகிறது. இதனால் கடையநல்லூர் பகுதியில் கார் சாகுபடி செய்ய விவசாயிகள் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனை மேற்கொள்ள முதற்கட்ட பணியாக துவங்கவேண்டிய நாற்றுபாவும் பணிகள் கூட ஒரு சில இடங்களில்தான் காண முடிகிறது.

பருவழையும் கைகொடுக்காத நிலையில், கார் சாகுபடிக்கான மழையும் இல்லாததால் விவசாயிகள் பெரும் ஏக்கத்துடன் இருந்து வருகின்றனர்.

## வறட்சியில் கை கொடுத்த "கோழிக்கொண்டை'

சத்தியமங்கலம்: கடும் வறட்சி காலத்திலும், கோழிக்கொண்டை பூ மகசூல் மற்றும் விலை அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகள் தங்கள் வயல்களில் கரும்பு, நெல், வாழை, புகையிலை உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்து வந்தனர். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக சத்தியமங்கலம் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் குறுகிய கால பயிர் மற்றும் வறட்சியை சமாளிக்கும் பயிரை தேர்வு செய்து பயிரிட தொடங்கினர்.

இதில் மல்லிகை பூ மற்றும் கோழிக்கொண்டை பூ முதலிடத்தை பிடித்தது. மலர் மாலைக்கு அதிகம் பயன்படும் பூ கோழிக்கொண்டை மற்றும் சம்பங்கி ஆகும். சம்பங்கி இடையே கோழிக்கொண்டை பூ வைத்தால் மட்டுமே அந்த மாலை பார்க்க அழகாக அமைவதால், மாலை கட்ட கோழிக்கொண்டை அவசியான பூவாக மாறியது.

இதனால் கடந்த ஆண்டு ஒரு கிலோ, 15 முதல், 40 வரை விற்பனையான கோழிக்கொண்டை பூ நடப்பு ஆண்டில் ஒரு கிலோ, 60 முதல், 200 வரை விற்பனையாகி வருகிறது. கடும் வறட்சியில், தேவையான அளவு தண்ணீர் பாய்ச்சாத நிலையில், உற்பத்தி கடந்த ஆண்டை காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதால் கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தரமற்ற பசுந்தேயிலையை வினியோகித்தால் சிக்கல் : கூட்டுறவு தொழிற்சாலைகள் அதிரடி அறிவிப்பு

மஞ்சூர்:"தரமற்ற பசுந்தேயிலை வினியோகித்தால் கொள்முதல் செய்ய முடியாது' என, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் அதிரடியாக அறிவித்துள்ளன.நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் தங்களது தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை அந்தந்த பகுதிகளில் உள்ள தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். தரமான இலை வழங்கி, நல்ல விலையை பெற தேவையான விழிப்புணர்வை தேயிலை வாரியம் விவசாயிகளிடையே ஏற்படுத்தி வருகிறது. எனினும், சமீப காலமாக தொழிற்சாலைக்கு வினியோகிக்கும் பசுந்தேயிலைகளில்,"காம்பு, கரட்டு இலை' போன்ற தரமற்ற பசுந்தேயிலையை வினியோகித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தரமற்ற இலையை வினியோகிப்பதன் மூலம், தரமான தேயிலை தூள் உற்பத்தி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டு வந்தது.

இதனை தொடர்ந்து, தேயிலை வாரியம், குன்னூர் இன்கோ சர்வ் ஆகியவை உத்தரவின்படி, "தரமற்ற பசுந்தேயிலை வினியோகித்தால், அதனை நிராகரிக்க வேண்டும்' என்ற அறிவிப்பு, மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.இதனை தொடர்ந்து, கூட்டுறவு தொழிற்சாலைகள் சார்பில், அங்கத்தினர்களுக்கும், "தரமற்ற பசுந்தேயிலை வினியோகித்தால் கொள்முதல் செய்ய முடியாது' என்ற சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. மேலும், அங்கத்தினர்கள் வினியோகித்த பசுந்தேயிலையில் இருந்த, காம்பு, கரட்டு போன்ற தரமற்ற இலைகள் பிரித்தெடுக்கப்பட்டு, அங்கத்தினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மஞ்சூர் உட்பட அந்தந்த தொழிற்சாலை வளாகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து, ஒரு கூட்டுறவு தொழிற்சாலையின் நிர்வாக இயக்குனர் ஒருவர் கூறுகையில், "தேயிலை வாரியம், இன்கோ சர்வ் ஆகியவற்றின் கண்டிப்பான உத்தரவையடுத்து, தரமற்ற பசுந்தேயிலை தடுக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதனையும் மீறி தரமற்ற இலைவந்தால், அதனை நிராகரிக்கவும் உத்தரவிட்டுள்ளோம். இந்த நடவடிக்கையின் மூலம் தரமான தூளும் உற்பத்தியாகும், நல்ல விலையும் கிடைக்கும்' என்றார்.

### வறட்சி நிவாரண தீவன சோளம் சாகுபடி: கரூர் கலெக்டர் ஆய்வு

கரூர்: கரூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரண தீவன சோளம் சாகுபடி மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டத்தை மாவட்ட கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் பருவமழை தவறியதால், வறட்சி நிவாரண தீவன சோளம் சாகுபடி திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரண தீவன சோளம் 700 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இதில், சாகுபடி செலவினமான 13 ஆயிரத்து, 600 ரூபாயில், அரசு மான்யமாக ஓர் ஏக்கருக்கு 6,800 வழங்கப்படுகிறது.

மேலும், 526 ஏக்கர் பரப்பளவில் கோ-3, கோ-4 பசுந்தீவன பயிர் சாகுபடி செய்ய, ஏக்கருக்கு முழு அரசு மான்யமாக மூன்றாயிரம் வழங்கப்படுகிறது.

மேலும், 2012-13 ம் ஆண்டில் 35 பயனாளிகளுக்கு 50 சதவீத அரசு மான்யத்தில் நாட்டுக்குகோழி வளர்ப்பு திட்டம் 20 லட்சத்து 47 ஆயிரம் ரூபாயில் செயல்படுத்தப் படுகிறது. நடப்பு நிதியாண்டில் (2013-14) நாட்டு கோழி வளர்ப்பு திட்டம் 240 பயனாளிகளுக்கு விரிவு படுத்தப்பட உள்ளது. மணவாடி கிராம பஞ்சாயத்தில் கந்தசாமி, சரவணன், கருப்பண்ணன் ஆகி யோரது நிலத்தில்

பயிரிடப்பட்டிருந்த வறட்சி நிவாரண தீவன சோளப்பயிரை, மாவட்ட கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்து, விவசாயிகளுடன் கலந்துரையாடினர். மேலும், பெரு மாள்பட்டியில் நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணையையும் கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார்.

## விவசாயிகள் சங்க கூட்டம்

கரூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், அகில இந்திய மாநாட்டு வரவேற்பு குழு கூட்டம், கரூர் சுங்ககேட் சங்க அலுவலகத்தில் மாவட்ட தலைவர் ரங்கராஜன் தலை மையில் நடந்தது. கூட்டத்தில், வரும் ஜூலை மாதம் 24ம் தேதி முதல் 27 ம் தேதி வரை கடலூ ரில் நடைபெறும், 33 வது அகில இந்திய விவசாய சங்க மாநாட்டு பேரணியில், கரூர் மாவ ட்டத்தில் இருந்து 10 பஸ்களில் 500 க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு வரவேற்பு குழு தலைவராக கந்தசாமி, துணைத்தலைவராக இலக்குவன், சண்முகம், ரங்கராஜன், வையாபுரி, செயலாளர்ராக சண்முகசுந்தரம், துணை செயலாளர்களாக முருகேசன், ராஜா, சங்கர நாராயணன், பழனிவேல், பொருளாளராக சுப்பிரமணியம் தேர்வு செய்யப்பட்டனர். மாநில குழு உறுப்பினர் சச்சிதானந்தம், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கந்தசாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் சண்முகசுந்தரம், தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் இளங்கோவன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சிறுதானிய சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை :வேளாண் கருவிகள் இல்லாததே காரணம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையிலும், குறைந்த நீரில் விளையும் சிறு தானியங்களை பயிரிடுவது, குறைந்து வருகிறது. இதற்கு, சிறு தானியங்களை அறுவடை செய்து, தானியங்களை பிரித்தெடுக்க தேவையான வேளாண் கருவிகள் இல்லாததே முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

பருவ மழை குறைவு, ஏரி பராமரிப்பில் மெத்தனம் உள்ளிட்ட காரணங்களால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வறட்சி நிலவும் இக்கால கட்டத்தில், எள், கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட, குறைந்த தண்ணீர் தேவைப்படும் சிறு தானிய பயிர்களை பயிரிடுவது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, சிறு தானிய பயிர்கள் சாகுபடி குறைந்து வருகிறது.

குறைவு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 700 ஹெக்டேர் பரப்பளவில் சிறு தானிய பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. நடப்பாண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, 300 ஹெக்டேர் பரப்பளவில், மானாவரி சாகுபடியாக, சிறு தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இது குறித்து, ஒரத்தியைச் சேர்ந்த, விவசாயி ஆனந்தன் கூறுகையில், ""என்னுடைய ஐந்து ஏக்கர் நிலத்தில், நெல், வேர்க்கடலை, கரும்பு மற்றும் காய்கறிகள் பயிர் செய்கிறேன். நெல் சாகுபடியில், நடவு செய்வதில் துவங்கி, அறுவடை செய்வது வரை இயந்திரங்கள் மூலம் செய்ய முடிகிறது. ஆனால், எள், கேழ்வரகு, உளுந்து சாகுபடியில், செலவு குறைவாக இருந்தாலும் அதற்கான உழைப்பு அதிகம். மேலும், அவற்றை அறுவடை செய்து, தானியங்களை பிரித்தெடுக்க, போதிய அளவில் வேளாண் கருவிகள் இல்லை. இதனால், சிறு தானிய சாகுபடி செய்வதில் ஆர்வமில்லை," என்றார்.

தவிர்ப்பு

வேளாண்மை துறை அதிகாரிகள் கூறுகையில், ""பொதுவாகவே விவசாயிகளிடம், விவசாயம் செய்யும் ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது, நெல், கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்வதில் மட்டுமே ஆர்வம் காட்டுகின்றனர். எள், கேழ்வரகு, உளுந்து போன்றவை தற்போது நல்ல விலை போகிறது. இருப்பினும், உழைப்பு அதிகம் என்பதால், அவற்றை பயிரிடாமல் தவிர்க்கின்றனர். சிறு தானியங்கள் விளைவிப்பதைவிட, அவற்றை அறுவடை செய்வதை கடினமாக கருதுகின்றனர்," என்றார்.

இதுகுறித்து, காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய தோட்டக்கலை பேராசிரியர் வேல்முருகன் கூறுகையில், ""சிறுதானியங்களை, குறைந்த நீர் பாசனம் மற்றும் குறைந்த செலவில் சாகுபடி செய்ய முடியும் என்ற போதிலும், பராமரிப்பு மற்றும் அறுவடை செய்தவற்கு, அதிகப்படியான கூலி ஆட்கள் தேவைப்படுகின்றனர். தற்போது, கூலி ஆட்கள் பற்றாக்குறையால், பெரும்பாலான விவசாயிகள், இதில் ஆர்வம் காட்டுவதில்லை. மேலும், இதற்காக, எவ்வித வேளாண் கருவிகளும் இல்லாததும் ஒரு காரணம்," என்றார்.

அரசு முன்வர வேண்டும்

மேலும், ""சிறுதானியங்கள், சந்தையில் அதிகப்படியான விலை போகின்ற போதிலும், வியாபாரிகள், விவசாயிகளிடம் குறைந்த விலைக்கே, பெறுகின்றனர். எனவே, விவசாயிகளிடம் இருந்து, அரசு நேரடியாக சிறுதானியங்களை கொள்முதல் செய்யவும், இதற்கான வேளாண் கருவிகளை, விவசாயிகளுக்கு வழங்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," இவ்வாறு அவர் கூறினார்.

எள், கேழ்வரகு, கம்பு போன்ற பயிர்களை பயிரிட அதிகமான தண்ணீர் தேவையில்லை. செலவும் மிக குறைவு. அவற்றின் சந்தை விலையும் அதிகம். இதனால், லாபமும் மற்ற பயிர்களை காட்டிலும் பல மடங்கு அதிகமாக கிடைக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு ஒரு மூட்டை எள் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறது. இருப்பினும், அறுவடைக்கும், தானியங்களை பிரித்தெடுக்கவும் போதிய வேளாண் கருவிகள் அறிமுகப்படுத்தப்படாமல் இருப்பதால், கூலி ஆட்களை அதிகமாக பயன்படுத்த வேண்டி உள்ளது.

விழிப்புணர்வு தேவை

மேலும், கேழ்வரகு, எள் உள்ளிட்ட சிறு தானியங்களுக்கு சந்தையில் உள்ள கிராக்கி, அதிக லாபம் ஆகியவை குறித்து, விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவி வரும் இந்த காலகட்டத்தில், சிறு தானிய உற்பத்தி குறித்த விழிப்புணர்வை வேளாண் துறை அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## வறண்டது மாபெரும் மதுராந்தகம் ஏரி 20 ஆயிரம் ஏக்கர் விவசாயம் பாதிப்பு

மதுராந்தகம் : மாவட்டத்தின் பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியில், நீர் மட்டம் படிப்படியாக குறைந்து வருவதால், ஏரியை நம்பி உள்ள, 20 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களில், விவசாயம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், பெரிய ஏரி என்ற பெருமைக்குரியது, மதுராந்தகம் ஏரி. மொத்தம், 1,446 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள, இந்த ஏரியின் கரை, 26 அடி உயரம் கொண்டது. உத்தம சோழன் என்பவரால், இந்த ஏரி உருவாக்கப்பட்டது. அப்போதிலிருந்து, பருவ மழையின் போது, ஏரி அடிக்கடி உடைவதால், கரைகள் உயர்த்தப்பட்டு, சரி செய்யப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் காலத்தில் மாவட்ட ஆட்சியராக இருந்த லயோனஸ் துரை, இந்த ஏரியின் கரையை வலிமை வாய்ந்ததாக சீரமைத்தார்.முப்போகம் பாலாற்றில் இருந்து, ஆரணி, செய்யார், உத்திரமேரூர், கிளியாறு வழியாக, மழைநீர் மதுராந்தகம் ஏரியை வந்தடைகிறது. இந்த ஏரியின் மூலம், கருங்குழி, கே.கே.புதூர், முள்ளி, அரைப்பாக்கம், அருங்குணம், தச்‹ர் உள்ளிட்ட, 26 கிராமங்களில் உள்ள, 20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன.

இந்த ஏரி நீர் மூலம், சுற்றுப் பகுதிகளில் முப்போகம் பயிர் விளைந்து வந்தது. வெள்ளத்தில் அடித்து வரப்படும் வண்டலை தூர் வாரததால், கொள்ளளவு குறைந்து, தற்போது ஒரு போகம் பயிர் செய்யும் அளவிற்கு மட்டுமே நீர் பெற முடிகிறது. இந்நிலையில், தற்போது, மிகப்பெரிய மதுராந்தகம் ஏரி வறண்டு காணப்படுகிறது. இதனால், 20 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில்,

விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.ஆக்கிரமிப்புஇதுகுறித்து, தோட்ட நாவல் பகுதியைச் சேர்ந்த பாக்கியநாதன் கூறுகையில்,""விவசாய நிலத்திற்கு செல்லும் ஏரி வரத்து கால்வாய்களை, ரியல் எஸ்டேட் அதிபர்கள் விதிகளை மீறி ஆக்கிரமித்துள்ளனர். இதற்கு, தாலுகா அலுவலக அதிகாரிகளும், நகராட்சி அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர். வரத்து கால்வாயிகள் ஆக்கிரமிப்பின் பிடியில் உள்ளதால், விவசாய நிலத்திற்கு ஏரி நீர் வருவதில்லை. இதனால் விவசாயம் பாதிக்கும் அபாயம் உருவாகியுள்ளது. கடந்த, 1968ம் ஆண்டில், இந்த ஏரி கடைசியாக தூர்வாரப்பட்டது. அதன்பின் இந்த ஏரி முறையான பராமரிப்பின்றி உள்ளது குறிப்பிடத்தக்கது," என்றார்.

## விவசாயிகள் பயிற்சி மையங்களுக்கு ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கீடு : திருத்தணி, சோழவரத்தில் புதிய கட்டடங்கள்

திருத்தணி : திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, சோழவரம் ஆகிய இடங்களில், விவசாயிகள் பயிற்சி மையங்களுக்கான கட்டடங்கள் கட்ட, 1.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அதற்கான நிலம் தேர்வு செய்யும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களிலும், தோட்டக்கலை துறை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உதவி தோட்டக்கலை இயக்குனர், தோட்டக்கலை அலுவலர், மற்றும் நான்கு உதவி வேளாண்மை அலுவலர்கள் என, மொத்தம் ஆறு பணியிடங்கள் உள்ளன.

மானியத்துடன் விதைகள்

இவர்கள், ஒன்றியத்தில், அதிகளவில் விவசாயிகள் வசிக்கும் கிராமத்திற்கு நேரில் சென்று, காய்கறி, பழவகைகள், மலர் வகைகள், மூலகை சாகுபடி போன்ற தோட்டக்கலை பயிர்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, தோட்டக்கலை பயிர்களுக்கு அரசு வழங்கும் மானியம் குறித்தும் எடுத்து கூறுகின்றனர்.

இதுதவிர, விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், சப்போட்டா, கொய்யா, திராட்சை போன்ற பழவகை செடிகள் இலவசமாகவும், சலுகை விலையிலும் வழங்குகின்றனர்.

மேலும், தோட்டக்கலை பயிர் செய்வதற்கும் சொட்டுநீர் பாசனத்திற்கும் மானியத்துடன் கடனுதவி பெற்று தருவதுடன், ஆண்டுக்கு, 1500 விவசாயிகளுக்கு தோட்டக்கலை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியத்தில் காய்கறி விதைகள், இடுபொருட்கள் துறை மூலம் வழங்கப்படுகிறது. இந்தாண்டு முதல் நகர்ப்புற காய்கறி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தில், 15 முதல், 20 விவசாயிகள் குழு ஆரம்பித்து வங்கி கணக்கு துவக்கப்படுகிறது.

அந்தக் கணக்கு மூலம், நகர்ப்புற காய்கறி திட்டத்தின் வாயிலாக மானியத்துடன் காய்கறி விதைகள், இடுபொருட்கள் வழங்கப்பட்டு, காய்கறிகளை கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகளில் விற்பனைக்கு நேரடியாக அனுப்பப்படவுள்ளது.

விவசாயிகள் குழு

முதற்கட்டமாக, திருத்தணி ஒன்றியம், சத்திரஜெயபுரம் கிராமத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. காய்கறி பயிரிடும் கிராமங்களில், 15 முதல், 20 விவசாயிகள் குழு அமைத்து, தற்போது பயிற்சி தரப்பட்டு வருகிறது.

மேலும், இவர்களுக்கு வங்கி கணக்கு துவங்கப்படவுள்ளது. ஒரிரு நாட்களில் இவர்களுக்கு விதைகள் வழங்கி, காய்கறிகள் பயிரிடவும், அதை எப்படி பராமரிப்பது என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தோட்டக்கலை துறை சார்பில், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு போதிய கட்டட வசதி இல்லாமல், ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர்.

தற்போது, முதற்கட்டமாக, மாவட்டத்தில், இரு அலுவலகங்களுக்கு விவசாய பயிற்சி மையம் அமைப்பதற்கு முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ரூ.1.10 கோடி

இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:

மாவட்டத்தில் உள்ள திருத்தணி, சோழவரம் ஆகிய இரு அலுவலகங்களுக்கு முதற்கட்டமாக விவசாயிகள் பயிற்சிமையம் அமைப்பதற்கு (2012-13ம் ஆண்டு) தலா, 55 லட்சம் ரூபாய் என, 1.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கட்டடம் கட்டுவதற்கான தொகையும் அரசு வழங்கிஉள்ளது.

தற்போது, விவசாய பயிற்சி மையம் ஏற்படுவதற்கு தேவையான, 5,000 சதுரஅடி நிலம் வேண்டும் என, வருவாய் துறை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி நிர்வாகத்திற்கு பரிந்துரை கடிதம் அனுப்பி உள்ளோம். நிலம் ஒதுக்கீடு செய்த பின்பு, ஓரிரு மாதங்களில் கட்டடப் பணிகளை ஆரம்பித்து, ஒரு ஆண்டில் முடிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இதே போல், மீதமுள்ள, 12 ஒன்றியத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகம் சார்பில் விவசாய பயிற்சி மையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு படிப்படியாக நிதி ஒதுக்கப்படவுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## விதைகளை பரிசோதித்து விதைக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

திருவள்ளூர் : தென்மேற்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், விவசாயிகள் தங்களிடம் நெல், சிறுதானியங்கள், காய்கறி விதைகளை பரிசோதித்து விதைக்க வேண்டும் என, விதை பரிசோதனை நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நல்ல தரமான விதை மட்டுமே அதிக மகசூல் கொடுக்கும். தரமான விதையின் மூலம், 25 முதல், 30 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கும் என்பது, ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
தற்போது, தென்மேற்கு பருவமழை துவங்க உள்ள நிலையில், விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல், சிறுதானியங்கள், காய்கறி விதைகள் ஆகியவை நல்ல முளைப்பு திறன் உள்ளதா என, அறிந்து, விதைப்பதற்கு முன்பே விதையின் தரம் அறிந்து கொண்டால், தரமான விதைகளை மட்டுமே விதைத்து, அதிக லாபம் பெறலாம்.
மேலும், தேவையான அளவு விதைகளை மட்டுமே பயன்படுத்தி, விதை செலவை குறைக்கலாம். எனவே, விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளின் தரத்தினை அறிய, விதை மாதிரி எடுத்து, வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை ஆய்வகம், எண்:48, ஜே.என்.சாலை, பெரிய குப்பம் (ஆயில்மில் பேருந்து நிலையம் அருகில்), திருவள்ளூர்-602 001 என்ற முகவரிக்கு,30 ரூபாய் பரிசோதனை கட்டணத்துடன் நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு, திருவள்ளூர் விதை பரிசோதனை நிலைய, மூத்த வேளாண்மை அலுவலர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## மக்காசோளம் விலை உயர்வு

சின்னசேலம்:சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் வருகை குறைந்தது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் 170 மூட்டைகளும், எள் 8 லாட்களும் வந்தன. இதில் மக்கா சோளம் அதிகபட்சமாக ரூ 1432க்கும் குறைந்த விலை ரூ1339க்கும் விற்றது. சென்ற வார விலையை விட மூட்டைக்கு 55 ரூபாய் உயர்ந்துள்ளது. எள் அதிகபட்ச விலை ரூ 5501ம், குறைந்த விலை ரூ5009. சென்ற வாரம் மக்கா சோளம் 626 மூட்டைகள் வந்தன. ரூபாய் 8 லட்சத்து 41 ஆயிரத்திற்கு கொள்முதல் செய்தனர். எள் ரூபாய் 1லட்சத்து 66 ஆயிரத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டது.

## ஆந்திர மாநிலத்தில் வறட்சி எலுமிச்சை வரத்து பாதியாக குறைவு

சேலம்: ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, எலுமிச்சை வரத்து பாதியாக குறைந்துள்ளது. கோடை காலத்தில் லெமன் ஜூஸ், மோர், கரும்பு ஜூஸ் மற்றும் பழ ரசங்களின் விற்பனை அதிகம் இருக்கும். தமிழகத்தில் விளையும் எலுமிச்சை பழங்களின் தேவை அந்தந்த பகுதி மக்களுக்கே போதுமானதாக இருக்கிறது. இதனால், தமிழகத்து எலுமிச்சை வெளி மாநிலங்களுக்கு செல்வதில்லை. ஆந்திர மாநிலத்தில் விளையும் எலுமிச்சைகளே தமிழகத்துக்கு வரத்தாகிறது. தற்போது, ஆந்திர மாநிலத்தில் கோடை வெயில் கொளுத்துவதால், எலுமிச்சை பழங்களின் வரத்து பாதியாக குறைந்துள்ளது.
சேலம், எலுமிச்சை கமிஷன் ஏஜென்ட் வெங்கடேஸ்வரராஜ் கூறியதாவது:

ஆந்திர மாநிலத்தில் விளையும் எலுமிச்சை பழங்கள் பெரிதாகவும், சாறு அதிகமாகவும் இருக்கும். ஆந்திர மாநிலம் கடப்பா, கூடூர் ஆகிய மாவட்டங்களில் விளையும் எலுமிச்சைகள் சேலம், கோவை, சென்னை, திருச்சி, மதுரை உள்பட தமிழகத்தின் பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
தினமும் சேலம் மார்க்கெட்டுக்கு, 500 மூட்டை எலுமிச்சை பழங்கள் வரத்தாகி கொண்டிருந்தது. தற்போது, 250 முதல், 270 மூட்டைகள் மட்டுமே வரத்தாகிறது. கடும் வறட்சி, மழை இல்லாத நிலை ஆகியவை காரணமாக, எலுமிச்சை வரத்து அடியோடு குறைந்துள்ளது. சேலத்தில், மே மாதத்துக்கு முன்புவரை, பெரிய எலுமிச்சை ஒரு மூட்டை, 1,000 ரூபாய் வரை ஏலம் சென்றது. தற்போது, வரத்து குறைவால் ஒரு மூட்டை, 1,600 ரூபாய்க்கு ஏலம் செல்கிறது. சிறிய எலுமிச்சை மூட்டை, 600 ரூபாயாக இருந்தது; 1,000 ரூபாயாக உயர்ந்துள்ளது. சில்லரையில் வியாபாரிகள், ஒரு எலுமிச்சை பழத்தை, மூன்று முதல் நான்கு ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.
இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 320 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 315 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 5 காசு உயர்த்தி, 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, நாளுக்கு நாள் ஏற்றம் கண்டு வருவது பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:
சென்னை 323, பெங்களூரு 308, மைசூர் 313, ஹைதராபாத் 279, மும்பை 314, விஜயவாடா 282, கொல்கத்தா 350, பர்வாலா 283, டில்லி 295.
இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 60 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 72 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## சிறுதானிய சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை :வேளாண் கருவிகள் இல்லாததே காரணம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையிலும், குறைந்த நீரில் விளையும் சிறு தானியங்களை பயிரிடுவது, குறைந்து வருகிறது. இதற்கு, சிறு தானியங்களை அறுவடை செய்து, தானியங்களை பிரித்தெடுக்க தேவையான வேளாண் கருவிகள் இல்லாததே முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

பருவ மழை குறைவு, ஏரி பராமரிப்பில் மெத்தனம் உள்ளிட்ட காரணங்களால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வறட்சி நிலவும் இக்கால கட்டத்தில், எள், கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட, குறைந்த தண்ணீர் தேவைப்படும் சிறு தானிய பயிர்களை பயிரிடுவது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, சிறு தானிய பயிர்கள் சாகுபடி குறைந்து வருகிறது.

குறைவு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 700 ஹெக்டேர் பரப்பளவில் சிறு தானிய பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. நடப்பாண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, 300 ஹெக்டேர் பரப்பளவில், மானாவரி சாகுபடியாக, சிறு தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இது குறித்து, ஒரத்தியைச் சேர்ந்த, விவசாயி ஆனந்தன் கூறுகையில், ""என்னுடைய ஐந்து ஏக்கர் நிலத்தில், நெல், வேர்க்கடலை, கரும்பு மற்றும் காய்கறிகள் பயிர் செய்கிறேன். நெல் சாகுபடியில், நடவு செய்வதில் துவங்கி, அறுவடை செய்வது வரை இயந்திரங்கள் மூலம் செய்ய முடிகிறது. ஆனால், எள், கேழ்வரகு, உளுந்து சாகுபடியில், செலவு குறைவாக இருந்தாலும் அதற்கான உழைப்பு அதிகம். மேலும், அவற்றை அறுவடை செய்து, தானியங்களை பிரித்தெடுக்க, போதிய அளவில் வேளாண் கருவிகள் இல்லை. இதனால், சிறு தானிய சாகுபடி செய்வதில் ஆர்வமில்லை," என்றார்.

தவிர்ப்பு

வேளாண்மை துறை அதிகாரிகள் கூறுகையில், ""பொதுவாகவே விவசாயிகளிடம், விவசாயம் செய்யும் ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது, நெல், கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்வதில் மட்டுமே ஆர்வம் காட்டுகின்றனர். எள், கேழ்வரகு, உளுந்து போன்றவை தற்போது நல்ல விலை போகிறது. இருப்பினும், உழைப்பு அதிகம் என்பதால், அவற்றை பயிரிடாமல் தவிர்க்கின்றனர். சிறு தானியங்கள் விளைவிப்பதைவிட, அவற்றை அறுவடை செய்வதை கடினமாக கருதுகின்றனர்," என்றார்.

இதுகுறித்து, காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய தோட்டக்கலை பேராசிரியர் வேல்முருகன் கூறுகையில், ""சிறுதானியங்களை, குறைந்த நீர் பாசனம் மற்றும் குறைந்த செலவில் சாகுபடி செய்ய முடியும் என்ற போதிலும், பராமரிப்பு மற்றும் அறுவடை செய்தவற்கு, அதிகப்படியான கூலி ஆட்கள் தேவைப்படுகின்றனர். தற்போது, கூலி ஆட்கள் பற்றாக்குறையால், பெரும்பாலான விவசாயிகள், இதில் ஆர்வம் காட்டுவதில்லை. மேலும், இதற்காக, எவ்வித வேளாண் கருவிகளும் இல்லாததும் ஒரு காரணம்," என்றார்.

அரசு முன்வர வேண்டும்

மேலும், ""சிறுதானியங்கள், சந்தையில் அதிகப்படியான விலை போகின்ற போதிலும், வியாபாரிகள், விவசாயிகளிடம் குறைந்த விலைக்கே, பெறுகின்றனர். எனவே, விவசாயிகளிடம் இருந்து, அரசு நேரடியாக சிறுதானியங்களை கொள்முதல் செய்யவும், இதற்கான வேளாண் கருவிகளை, விவசாயிகளுக்கு வழங்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," இவ்வாறு அவர் கூறினார்.

எள், கேழ்வரகு, கம்பு போன்ற பயிர்களை பயிரிட அதிகமான தண்ணீர் தேவையில்லை. செலவும் மிக குறைவு. அவற்றின் சந்தை விலையும் அதிகம். இதனால், லாபமும் மற்ற பயிர்களை காட்டிலும் பல மடங்கு அதிகமாக கிடைக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு ஒரு மூட்டை எள் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறது. இருப்பினும், அறுவடைக்கும், தானியங்களை பிரித்தெடுக்கவும் போதிய வேளாண் கருவிகள் அறிமுகப்படுத்தப்படாமல் இருப்பதால், கூலி ஆட்களை அதிகமாக பயன்படுத்த வேண்டி உள்ளது.

விழிப்புணர்வு தேவை

மேலும், கேழ்வரகு, எள் உள்ளிட்ட சிறு தானியங்களுக்கு சந்தையில் உள்ள கிராக்கி, அதிக லாபம் ஆகியவை குறித்து, விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவி வரும் இந்த காலகட்டத்தில், சிறு தானிய உற்பத்தி குறித்த விழிப்புணர்வை வேளாண் துறை அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் பயிற்சி மையங்களுக்கு ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கீடு : திருத்தணி, சோழவரத்தில் புதிய கட்டடங்கள்

திருத்தணி : திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி, சோழவரம் ஆகிய இடங்களில், விவசாயிகள் பயிற்சி மையங்களுக்கான கட்டடங்கள் கட்ட, 1.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அதற்கான நிலம் தேர்வு செய்யும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களிலும், தோட்டக்கலை துறை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உதவி தோட்டக்கலை இயக்குனர், தோட்டக்கலை அலுவலர், மற்றும் நான்கு உதவி வேளாண்மை அலுவலர்கள் என, மொத்தம் ஆறு பணியிடங்கள் உள்ளன.

மானியத்துடன் விதைகள்

இவர்கள், ஒன்றியத்தில், அதிகளவில் விவசாயிகள் வசிக்கும் கிராமத்திற்கு நேரில் சென்று, காய்கறி, பழவகைகள், மலர் வகைகள், மூலகை சாகுபடி போன்ற தோட்டக்கலை பயிர்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, தோட்டக்கலை பயிர்களுக்கு அரசு வழங்கும் மானியம் குறித்தும் எடுத்து கூறுகின்றனர்.

இதுதவிர, விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், சப்போட்டா, கொய்யா, திராட்சை போன்ற

பழவகை செடிகள் இலவசமாகவும், சலுகை விலையிலும் வழங்குகின்றனர்.

மேலும், தோட்டக்கலை பயிர் செய்வதற்கும் சொட்டுநீர் பாசனத்திற்கும் மானியத்துடன் கடனுதவி பெற்று தருவதுடன், ஆண்டுக்கு, 1500 விவசாயிகளுக்கு தோட்டக்கலை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியத்தில் காய்கறி விதைகள், இடுபொருட்கள் துறை மூலம் வழங்கப்படுகிறது. இந்தாண்டு முதல் நகர்ப்புற காய்கறி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தில், 15 முதல், 20 விவசாயிகள் குழு ஆரம்பித்து வங்கி கணக்கு துவக்கப்படுகிறது.

அந்தக் கணக்கு மூலம், நகர்ப்புற காய்கறி திட்டத்தின் வாயிலாக மானியத்துடன் காய்கறி விதைகள், இடுபொருட்கள் வழங்கப்பட்டு, காய்கறிகளை கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகளில் விற்பனைக்கு நேரடியாக அனுப்பப்படவுள்ளது.

விவசாயிகள் குழு

முதற்கட்டமாக, திருத்தணி ஒன்றியம், சத்திரஜெயபுரம் கிராமத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. காய்கறி பயிரிடும் கிராமங்களில், 15 முதல், 20 விவசாயிகள் குழு அமைத்து, தற்போது பயிற்சி தரப்பட்டு வருகிறது.

மேலும், இவர்களுக்கு வங்கி கணக்கு துவங்கப்படவுள்ளது. ஓரிரு நாட்களில் இவர்களுக்கு விதைகள் வழங்கி, காய்கறிகள் பயிரிடவும், அதை எப்படி பராமரிப்பது என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தோட்டக்கலை துறை சார்பில், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு போதிய கட்டட வசதி இல்லாமல், ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர்.

தற்போது, முதற்கட்டமாக, மாவட்டத்தில், இரு அலுவலகங்களுக்கு விவசாய பயிற்சி மையம் அமைப்பதற்கு முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ரூ.1.10 கோடி

இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:

மாவட்டத்தில் உள்ள திருத்தணி, சோழவரம் ஆகிய இரு அலுவலகங்களுக்கு முதற்கட்டமாக விவசாயிகள் பயிற்சிமையம் அமைப்பதற்கு (2012-13ம் ஆண்டு) தலா, 55 லட்சம் ரூபாய் என, 1.10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கட்டடம் கட்டுவதற்கான தொகையும் அரசு வழங்கிஉள்ளது.

தற்போது, விவசாய பயிற்சி மையம் ஏற்படுவதற்கு தேவையான, 5,000 சதுரஅடி நிலம் வேண்டும் என, வருவாய் துறை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி நிர்வாகத்திற்கு பரிந்துரை கடிதம் அனுப்பி உள்ளோம். நிலம் ஒதுக்கீடு செய்த பின்பு, ஓரிரு மாதங்களில் கட்டடப் பணிகளை ஆரம்பித்து, ஒரு ஆண்டில் முடிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இதே போல், மீதமுள்ள, 12 ஒன்றியத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகம் சார்பில் விவசாய பயிற்சி மையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு படிப்படியாக நிதி ஒதுக்கப்படவுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

# விவசாய மலர்

## மணக்க... மணக்க... மண்புழு உரம்



இயற்கையை நோக்கி செல்ல செல்ல... இயற்கை நம்மை நோக்கி சிரித்து வரும். இதமாய் விளைச்சல் தரும். இன்னல் இல்லாத விளைபொருளைத் தரும். ரசாயன உரம் உடனடி பலனைத் தந்தாலும், உடலுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். இப்போதாவது விழித்துக் கொண்டோமே... என நினைக்கும் விவசாயிகள், இயற்கை விவசாயத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டனர். மதுரை டி.வாடிப்பட்டி, சாணம்பட்டியைச் சேர்ந்த விவசாயி கே.சிவசாமி, தனக்கு மட்டுமின்றி, மற்ற விவசாயிகளுக்குத் தேவையான மண்புழு உரத்தை தயாரித்து வருகிறார்.
அனுபவத்தில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு, அதையே தனது லாபம் தரும் தொழிலாக மாற்றியதை கூறுகிறார்.
பத்து ஏக்கர் நிலத்தில் ஆரம்பத்தில் எல்லா வகையான விவசாயமும் செய்து வந்தேன். அப்போதெல்லாம் ரசாயன உரம் தான் எனக்குத் தெரிந்தது. 2002ல் கதர் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் மூலம் மண்புழு உரப்பண்ணை அமைக்க, ரூ.5 லட்சம் கடன் வாங்கினேன். ரூ.ஒன்றரை லட்சம் மானியம் கிடைத்தது. தரையில் 80 சிமெண்ட் தொட்டி அமைத்து மண்புழு உரத்தயாரிப்பை துவங்கினேன்.
சிமெண்ட் தொட்டியில் உர உற்பத்தி தாமதமாக இருந்தது. அடியில் உள்ள கழிவுகளை புழு சாப்பிடவில்லை. கிடைப்பது கிடைக்கட்டும் என, கழிவுகளை தென்னை மரத்திற்கு கீழே கொட்டினேன். சிலநாட்கள் கழித்து பார்த்தபோது, அந்த கழிவுகளை புழுக்கள் தின்று உரமாக

மாற்றின. திறந்தவெளி தென்னந்தோப்பில் மண்புழு பண்ணை அமைத்து பார்க்க முடிவு செய்தேன்.
ஆரம்பத்தில் 20 அடி நீளம், நான்கடி அகலத்திற்கு செங்கற்களை பாத்தி போல் அமைத்தேன். அதில் 80 டன் மாட்டுச்சாணம், 20 சதவீதம் சர்க்கரை கழிவை கலந்து கொட்டி, 15 கிலோ புழுக்களை விட்டேன். 25 நாட்களில் மேற்பகுதி உரமாக மாறியிருந்தது. பத்து நாட்கள் இடைவெளியில் ஏழுமுறை அறுவடை செய்தேன். 80 நாட்களில் மொத்த கழிவும் உரமாக மாறியது. தற்போது செங்கல் அமைப்பதையும் விட்டு விட்டேன்.
தென்னந்தோப்பில் இரண்டு தென்னைகளுக்கு ஊடாக மொத்தம் 120 படுக்கைகளில் உரம் தயாரிக்கிறேன். மழைபெய்தாலும் சிறிது நேரத்தில் புழுக்கள் மீண்டும் படுக்கைக்கு வந்து விடும். இதனால் நஷ்டமில்லை. மாதம் 800 டன் உரம் தயாரிக்கிறேன். தமிழகம், கர்நாடகாவில் 20 சதவீதம், கேரளாவில் 80 சதவீதம் விற்பனையாகிறது. விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலையில் இருந்தால் தான், உரம் வாங்குவர். எனவே, ஒருகிலோ ரூ.3.50க்கு விற்பனை செய்கிறேன். குறைந்த லாபம் கிடைத்தால் போதும். தென்னந்தோப்பிற்கும் இதையே தருகிறேன். பத்தாண்டுகளாக வேறெந்த ரசாயன உரம், பூச்சிகொல்லியை பயன்படுத்தவில்லை.
சாணத்தோடு அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா நுண்ணுயிர் கலந்து, பஞ்சகாவ்யம் தெளித்து வளர்ப்பதால், உரத்தில் நுண்ணுயிர்கள் பெருகி இருக்கும். விளைச்சலும் அதிகரிக்கும். ஒரு கிலோ மண்புழு ரூ.250க்கு தருகிறேன். தொட்டிக்கு பணம் செலவிடுவதை விட, இயற்கையான முறையில் மண்புழு வளர்த்தால், இருமடங்கு உரம் கிடைக்கும், என்றார்.
**உரம் வாங்குவதற்கு:99947 98312.**

## சின்னச்சின்ன செய்திகள்



**பாலில் கொழுப்பு மற்றும் கொழுப்பில்லாத திடப்பொருட்களின் அளவை அதிகரிக்க வழிமுறைகள்:** பாலில் கொழுப்புச்சத்து மற்றும் கொழுப்பு அல்லாத திடப்பொருள்களின்

அளவைப் பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

பாலில் உள்ள சத்துக்களின் அளவு மாட்டின் இனம், கறவை நிலை, தீவனம் மற்றும் பராமரிப்பு முறைகளைப் பொறுத்து மாறுபடும். பாலில் உள்ள சத்துக்கள் - தண்ணீர் - 83-87 சதவீதம், கொழுப்பு-3-5 சதம் (பசும்பால்), 6-8 சதம் (எருமைப்பால்), புரதம்-3.5 -3.8சதம், சர்க்கரை- 4.8 - 5.0 சதம். தாதுக்கள் - 0.7சதம்.

**பெருமளவு மாறுபடும் சத்துக்கள்:** கொழுப்பு மற்றும் புரதம். சிறிதளவு மாறுபடும் சத்துக்கள்: சர்க்கரை மற்றும் தாதுக்கள்.

**பாலில் கொழுப்புச்சத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்:** * மொத்த தீவனத்தில் நார்ச்சத்தின் அளவு 30 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

* பசுந்தீவனங்கள் மட்டுமில்லாமல் உலர் தீவனங்களையும் கறவை மாடுகளுக்கு சேர்த்து கொடுக்க வேண்டும். நார்த்தீவனங்களை மிகவும் சிறு துண்டுகளாக நறுக்காமல் ஒரு அங்குலத்திற்கு மேல் இருக்குமாறு வெட்டவேண்டும். கோ-3 அல்லது கோ-4 கம்பு நேப்பியர் புல்லை 40 முதல் 45 நாட்களுக்குள் அறுவடை செய்து தீவனமாக அளிக்க வேண்டும்.

* பருத்திக்கொட்டைப் புண்ணாக்கு, புளியங் கொட்டைத்தூள், மரவள்ளிக்கிழங்கு திப்பி ஆகியவற்றை தீவனமாக அளிக்கலாம்.

* தரம் குறைவான உலர்தீவனங்களான வைக்கோல் தட்டை ஆகியவற்றை பிரதான தீவனமாக கறவை மாடுகளுக்கு பயன்படுத்தும் போது தாது உப்புக்கலவை (30-50 கிராம்), புண்ணாக்கு வகைகள் (200-500 கிராம்) மற்றும் ஈஸ்ட் நொதி(10 கிராம்) கொடுக்க வேண்டும்.

**பாலில் கொழுப்பில்லாத திடப்பொருள்கள் அதிகரிப்பதற்கான வழிமுறைகள்:**

* கறவை மாடுகளுக்கு போதிய அளவு சரிவிகித சமச்சீர் தீவனம் அளிக்க வேண்டும்.

* உதாரணமாக 10 லிட்டர் கறக்கும் மாட்டிற்கு உண்ணும் அளவிற்கு உலர்தீவனம், 30 கிலோ பசுந்தீவனம் மற்றும் ஒவ்வொரு 2.5 லிட்டர் பால் உற்பத்திக்கும் ஒரு கிலோ கலப்புத் தீவனம் என்ற அளவில் கொடுக்க வேண்டும்.

* கன்று ஈன்ற பின் முதல் 3 மாதங்களுக்கு ஒரு கிலோ தானிய மாவு (கம்பு, ராகி, சோளம், மக்காச்சோளம்) அளிக்க வேண்டும்.

* நாள் ஒன்றுக்கு 15 லிட்டருக்கு மேல் கறக்கும் மாடுகளுக்கு அடர் தீவனத்தை 4 அல்லது 5 வேளையாக பிரித்து கொடுக்க வேண்டும். மேலும் ஒரு மாட்டிற்கு 30 கிராம் சோடியம் பைகார்பனேட் என்ற அளவில் கொடுக்க வேண்டும். 100 கிலோ கலப்புத் தீவனத்திற்கு 300-500 கிராம் சோடியம் பைகார்பனேட் சேர்க்கலாம்.

* தவிடு புண்ணாக்கு மற்றும் தானிய மாவு ஆகியவற்றை ஊறவைத்து கொடுக்கலாம். தீவனத்தில் நொதி (20-30 கிராம்) கொடுப்பதால் செரிமானத் திறன் கூடுவதோடு கொழுப்பில்லாத திடப்பொருள்களின் அளவும் அதிகரிக்கும்.

* கோடைகாலத்தில் வெப்பஅயர்ச்சி அதிகம் எனில் மாட்டை குளிப்பாட்ட வேண்டும். மேலும்

தீவனத்தில் பேக்கரி ஈஸ்ட் (10 கிராம்) மற்றும் தாது உப்பு கலவை (50 கிராம்) அளிக்க வேண்டும்.
* அதிக பால் சுரக்கும் மாடுகளுக்கு தானிய அறுவடைக்குப்பின் கிடைக்கும் வைக்கோல் தட்டைக்குப் பதிலாக சத்தான உலர்புல் அளிக்கலாம். (தகவல்: முனைவர் டி.சந்திரசேகரன், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உணவியல் துறை, கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல். 04286-266 491).

**கோலியஸ் ஒப்பந்த சாகுபடி:** உத்தரவாதமான மகசூலுக்கும் சாகுபடிக்கு உதவும் முன்பணத்திற்கும் திடமான கிழங்கு கிடைக்க வளமான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் நிறுவனம் (எம்.ஜி.பி. அக்ரோ மெடிகேர் (பி) லிட்., திருச்சி மெயின் ரோடு, மஞ்சினி கேட், ஒதியத்தூர் அஞ்சல், கெங்கவல்லி தாலுகா, சேலம்-636 105. போன்: 04282-275 649. 98427 17201)

## கோடைகால கால்நடை பராமரிப்பு

*பொதுவாக கோடை காலங்களில் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைந்தும், உடல் அயற்சி மிகுதியாகவும் இருக்கும். ஆகையால் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் கோடை காலத்தில் கால்நடைகளின் உற்பத்தி குறையாமல் பார்த்துக்கொள்ளலாம்.*

1. பசுக்களுக்கு மேய்ச்சல் நேரத்தை காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலுமாக மாற்றிக்கொண்டால் வெப்பத் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.
2. கோடைகாலத்தில் பசும்புல் நிறைய அளிக்க வேண்டும். தற்போது வீரிய ரக ஒட்டுப்புல்லான கோ-3, தீவனச்சோளம், வேலி மசால் மற்றும் அகத்தி ஆகிய பசுந்தீவனம் அளித்தால் வெயில் அயற்சியை தடுத்தும் பால் உற்பத்தியையும் சினைப்பசுக்களின் சினைக்காலத்தில் கன்றின் வளர்ச்சியையும் மேம்படுத்தலாம்.
3. காலை மற்றும் மாலையில் இரு வேளைகள் பசுக்களை குளிப்பாட்டலாம். அவ்வாறு செய்தால் உடல் வெப்பம் தணிந்து பசுக்களில் பால் உற்பத்தி குறையாமல் செய்யலாம்.
4. கால்நடைகளின் கொட்டகையின் மேற்புரத்தில் சாக்குத் துணிகளை ஈரப்படுத்தி பரவவிடுதல் அல்லது தென்னை கீற்று, பனை ஓலை முதலியன மேல் தண்ணீர் காலை, மாலை தெளித்துவிடுதல் மிகவும் அவசியம்.
5. கால்நடைகளுக்கு சுத்தமான குடிநீர் நிறைய கொடுத்தல் அவசியம். அவை குடிக்கும் நீரில் சத்து மாத்திரை அல்லது வைட்டமின் கலவை முதலியன கலந்து கொடுத்தால் வெயில் அயற்சி குறையும்.
6. கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு மடிநோய் தாக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் கொட்டகையின் தரை மற்றும் மாட்டின் மடி, பின்பகுதிகளை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் (1%) கொண்டு தினமும் கழுவிவிடுதல் வேண்டும்.

7. வீட்டில் வளர்க்கப்படும் மாடுகள் மற்றும் ஆடுகளை வெயிலில் கட்டாமல் நிழல் தரும் மரங்கள் அல்லது கொட்டகையில் பகல் பொழுதில் வைத்திருப்பது நலம்.

8. அடர் தீவனம் கலவை கண்டிப்பாக கோடை காலத்தில் கால்நடைகளுக்கு கொடுப்பது அதனுடைய உற்பத்தி திறனை பாதிக்காமல் இருக்கும். கறவை மாடுகளுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு 400 கிராம் அடர் தீவனம் என்ற அளவிலும் சினை பசுக்களுக்கு 1.5 கிலோ அடர் தீவனம் என்ற அளவிலும் அளிக்க வேண்டும்.

9. கோடை காலங்களில் பசுந்தீவனம் தட்டுப்பாடு ஏற்படுவதால் மூன்று மாதங்களுக்கு முன் ""ஊறுகாய் புல்" தயாரித்து வைத்துக்கொண்டால் வெயில் காலத்தில் அளிக்க ஏதுவாகும்.

பொதுவாக கோ-3 புல் என்ற பசும்புல்லை சிறு துண்டுகளாக வெட்டி நமது தேவைக்கேற்ப குழி வெட்டி அதில் இப்புற்களை போட்டு 2:1 என்ற சதவீதத்தில் வெல்லம் மற்றும் உப்பு கரைசல் தெளித்து காற்று புகாமல் மூடிவிட வேண்டும்.

பின் 70 நாட்கள் கழித்து இப்புல்லை உபயோகித்தால் மிகுந்த சத்துடனும், பசுந்தீவனம் கெடாமலும் கோடைக்காலத்தில் புல் தட்டுப்பாடு இல்லாமலும் இருக்கும்.

**கு.சுகுமார் மற்றும் பு.பூவராஜன்**

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.05.2013 A.M

## கட்டு ரூ.4,500க்கு விற்பனை வாழை இலை விலை கடும் உயர்வு



தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் வெயில் 105 டிகிரி அளவில் வீசுவதால், வாழை இலைகள் cவெம்பிவிடுகின்றன. இலைகளை பாதுகாக்க விவசாயிகள் படாதபாடு படுகின்றனர். இதனால் மார்கெட்டிற்கு வாழை இலைகள் வரத்து குறைவாக உள்ளது. மேலும், முகூர்த்த நாட்கள் வந்த வண்ணம் இருப்பதாலும் வாழை இலைகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சீசன் சமயத்தில் ஒரு கட்டு இலை 45க்கு விற்பனையாகி வந்தது. தற்போது 200 இலைகள் கொண்ட ஒரு கட்டு 4,000 முதல் ஸி4,500க்கு விற்கப்படுகிறது. நூறு மடங்கு விலை அதிகரித்துள்ளதால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தாலும் போதிய அளவுக்கு தண்ணீர் இல்லாததா தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர்.இந்த விலையேற்றத்தால் பல சிறிய ஓட்டல்களில் வாழை இலைக்கு பதில் பேப்பர் இலைகள், பாக்குமட்டை பிளேட்களும் பயன்படுத்தப்படுகின்றன.சில பெரிய ஓட்டல்களில் பெரும்பாலும் வாழை இலைக்கு மாற்றாக தயாரிக்கப்பட்டுள்ள பச்சை நிற வாழை இலை பேப்பர்களையே பயன்படுத்த துவங்கியுள்ளனர்.

## முட்டை விலை ரூ.320 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலையில் மேலும் 5 காசுகள் உயர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 320 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டையின் விற்பனை அதிகரித்து வருகிறது. மேலும், மற்ற மண்டலங்களிலும் முட்டையின் தேவை அதிகரித்துள்ளது.இதனால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.60 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.72 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

## வறட்சி நிவாரணம் வழங்கியதில் முறைகேடு விவசாயிகள் புகார்

திண்டுக்கல், : வறட்சி நிவாரண நிதியில் முறை கேடு நடைபெற்றுள்ளது. இதனால் ஒரு கிராமத்திற்கே இதற்கான நிதி கிடைக்கவில்லை என்று கூறி கோப்பம்பட்டி விவசாயிகள் திண்டுக்கல் கலெக் டர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க திரண்டு வந்து மனு கொடுத்தனர். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடமதுரை ஒன்றியம் மோர்பட்டி ஊராட்சிக்கு உட்பட்டது கோப்பம்பட்டி கிராமம். இங்கு சோளம், கம்பு, தக்காளி, கடலை உள்ளிட்ட பல்வேறு விளை பொருட்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதுகுறித்து முறையாக கணக்கெடுக்கவிலலை. இந்த பஞ்சாயத்தில் உள்ள மோர்பட்டி, குரும்பபட்டி, நாடுகண்டனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கோப்பம்பட்டி மட்டும் விடுபட்டுள்ளது. அரசு கெஜட்டில் கோப்பம்பட்டி என்ற ஊர் இருக்கிறதா இல்லையா?, இங்குள்ளவர்கள் விவசாயிகள் இல்லையா?. இங்குள்ள நிலங்களுக்கு வரிவசூல் மட்டும் செய்யப்படுகிறது. வறட்சி நிவாரண நிதியில் அதிகளவில் முறைகேடு நடந்துள்ளது. நடவடிக்கை எடுத்து வறட்சி நிவாரணம்

வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு மனு வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சூளகிரி ஒன்றிய பகுதிகளில் கொத்தமல்லி விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிவு விவசாயிகள்

சூளகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தளி, தேன்கனிக்கோட்டை மற்றும் சூள கிரி உள்ளிட்ட பகுதிகளில் எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ணநிலை நிலவுகிறது. இதில் சூளகிரி பகுதியில் ஆண்டு முழுவதும் உள்ள குளிர்ந்த சீதோஷ்ண நிலை காரண மாக புதினா, கொத்தமல்லி, கீரை மற்றும் காய்கறி விளைச்சல் அமோகமாக உள்ளது.

சூளகிரி ஒன்றிய பகுதி யில் ஏராளமான கிராமங்கள் உள்ளன. இதில் பேரிகை, அத்திமுகம், காளிங்காவரம், மாரண்டப்பள்ளி, மருதாண்டப்பள்ளி, சூளகிரி, கீரனப்பள்ளி, உலகம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவி வருவதால், கொத்தமல்லி, புதினா, கத்தரி, வெண்டை, தக்காளி, காலிபிளவர், முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு ஆகியவை அதிகள வில் விளைவிக்கப்படு கிறது. புதினா, கீரை மற்றும் காய்கறிகள் சூளகிரி சந் தைக்கு கொண்டு வரப்பட்டு பின், அவை வெளிமாவட்டங்களு க்கு விற்பனைக்கு வாகனங்களில் அனுப்பப்படுகிறது.

மருத்துவ குணங்கள் நிறைந்த புதினா, கொத்தமல்லி அதிகளவில் விளைவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் சேலம், சென்னை, வேலூர், கோவை, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவிலிருந்து வியாபாரிகள் நேரிடையாக வந்து கொள்முதல் செய்து செல்கின்றனர். சூளகிரி பகுதியிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 10 டன் வரை கொத்தமல்லி மற்றும் புதினா வகைகள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

சூளகிரியில் கடந்த வாரத்தில் கொத்தமல்லி கட்டு ஒன்றின் விலை ஞ்25 என விற்பனை செய்யப்பட்டது. வெளி மாவட்டங்களில் கட்டு ஒன்று ஞ்50 வரை விற்பனை செய்யப்பட் டது. இந்நிலையில் தற்போது, சூளகிரி சுற்றுவட்டார கிராமங்களில் கொத்தமல்லி விளைச்சல் அதிகரித்துள்ளதால், கட்டு ஒன்றின் விலை ஞ்20 என விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லியின் விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

29.05.2013 A.M

## ஆண்டிப்பட்டி பகுதியில் வெங்காயம் விலை 'கிடு,கிடு' உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

கண்டமனூர்,

ஆண்டிப்பட்டி பகுதியில் வெங்காயம் விலை 'கிடு,கிடு'வென உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரு கிலோ ரூ.70–க்கு விற்பனை செய்யப்படு கிறது.

வெங்காய சாகுபடி

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே கண்டமனூர், பாலக்கோம்பை, தெப்பம் பட்டி, ஜி.உசிலம்பட்டி, கதிர் நரசிங்கபுரம், கன்னியப்ப பிள்ளைப்பட்டி, மரிக்குண்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங் களில் வெங்காயம் சாகுபடி அதிகளவில் நடைபெறுகிறது. வழக்கமாக இந்த பகுதிகளில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி நடை பெறும்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்த நிலையில், இந்த பகுதிகளில் உள்ள கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் இந்த ஆண்டு ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் தான் வெங்காய சாகுபடி நடைபெற்றுள்ளது. அதே நேரத்தில ஒரளவு கை கொடுத்த கோடை மழை எதிரொலியாக தற்போது குறைந்த அளவில் சாகுபடி செய்யப்பட்ட வெங்காயம் அமோக விளைச்சல் அடைந் துள்ளது.

விலை உயர்வு

இருப்பினும் 1000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப் பட்ட நிலை மாறி வெறும் 300 ஏக்கர் பரப்பள விலான வெங் காயமே சந்தைக்கு கொண்டு வரப் படுவதால் வெங்காயம் வரத்து கடந்த ஆண்டுகளை விட தற்போது குறைவாகவே உள்ளது. இதன் எதிரொலியாக வெங்காய விலை 'கிடு,கிடு' வென உயர்ந்து வருகிறது. குறிப்பாக கடந்த வாரம் கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விற்கப்பட்ட வெங்காயம் தற்போது ஒரு கிலோ ரூ.68–ல் இருந்து ரூ.70 வரை தினசரி மார்க்கெட்டில் உள்ள வியா பாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த விலை உயர்வு எதி ரொலியாக, இந்த பகுதியில் வழக்கமாக வெங்காய சாகு படி செய்யும் விவசாயிகள் தென் மேற்கு பருவமழை கை கொடுக்கும் என்று நம்பி மீண் டும் வெங்காய சாகுபடியில் ஈடுபட தொடங்கி உள்ளனர். இதற்காக வெளி மாவட்டங் களுக்கு சென்று விதை வெங்காயம் வாங்கி விவ சாயிகள் தங்கள் வயல்களில் சாகுபடி செய்ய தற்போது ஆர்வம் காட்டுகின்றனர்.

குறிப்பாக துறையூர் பகுதிக்கு சென்று கிலோ ரூ.58–க்கு விதை வெங்காயம் வாங்கி நடவுப்பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் திரும்பிய திசை எங்கும் வெங் காய நடவுப்பணிகள் தீவிர மாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## நொய்யல் காவிரி ஆற்று விவசாய பயிரை காப்பாற்ற கிணறுகள் வெட்டவும், ஆழப்படுத்தவும் மாநில அரசு மானியத்துடன் நிதி வழங்க வேண்டுகோள்

நொய்யல்

நொய்யல் காவிரி ஆற்று விவசாய பயிரை காப்பாற்ற கிணறுகள் வெட்டவும், ஆழப்படுத்தவும் மாநில அரசு மானியத்துடன் நிதி வழங்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**பணப்பயிர்கள்**

கரூர் மாவட்டம் நொய்யல் மரவாபாளையம், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், முனிநாத புரம், கோம்புபாளையம், திருக்காடுதுறை உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் காவிரி கரையோர பகுதிகளிலும், புகழூர் வாய்க்காலை ஒட்டிய பகுதிகளிலும் காவிரி ஆறு, புகழூர் வாய்க்காலை நம்பி, அதன் பாசன பகுதிகளை ஒட்டிய கிணறுகளை நம்பியும் நெல், வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் போன்ற பணப் பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர்.

**வரண்டு கிடக்கும் மேட்டூர் அணை**

இந்த நிலையில் கர்நாட காவில் இருந்து மேட்டூர் அணைக்கு நீர் வரத்து இல்லாததால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து தற்போது குட்டைபோல் காட்சி அளிக்கிறது. அதனால் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததால் காவிரி ஆறு வறண்ட காவிரியாக உள்ளது.

இதனால் காவிரி ஆற்றில் இருந்து வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறந்து விட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. அதனால் புகலூர் வாய்க்காலிலும் தண்ணீர் திறந்துவிட முடியவில்லை.

**பயிர்கள் கரும் நிலையில் உள்ளது**

விவசாயிகள் காவிரி ஆற்றையும் புகழூர் வாய்க் காலையும் நம்பி விவசாயம் செய்து வந்தனர். தற்போது காவிரி ஆற்றிலும் புகழூர் வாய்க்காலிலும் தண்ணீர் இல்லாததால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை.அதேபோல் அருகே உள்ள கிணறுகள் மூலம் பாசனம் செய்யும் விவசாயிகள் கிணற்றில் தண்ணீர் வற்றி விட்டதால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் பயிர்கள் தண்ணீர் இன்றியும், வெயிலாலும் கருகும் நிலையில் உள்ளது. எனவே புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் மாநில அரசு மானியத்துடன் நிதி உதவி செய்ய வேண்டும் என நொய்யல் சுற்று வட்டார பொது மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## திருவள்ளூர், காஞ்சீபுரம் உள்பட தமிழகத்தின் பல பகுதிகளில் பலத்த மழை

திருவள்ளூர்,

திருவள்ளூர், காஞ்சீபுரம் உள்பட தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது.

<u>திருவள்ளூர், காஞ்சீபுரம்</u>

தமிழகம் முழுவதும் கடந்த 25 நாட்களாக சுட்டெரித்து வந்த அக்னி நட்சத்திரம் நேற்றுடன் முடிந்தது. கத்திரி வெயில் முடியும் தருவாயில் தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது. திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு, பேரம்பாக்கம், திருவாலங்காடு உள்பட பல பகுதிகளில் நேற்று மாலை 4 மணி முதல் 5.30 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. அதேபோல காஞ்சீபுரம் மாவட்டம் கூடுவாஞ்சேரி மற்றும் செங்கல்பட்டு சுற்றுவட்டார பகுதியிலும் மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரை பலத்த மழை கொட்டியது.

<u>திண்டிவனத்தில் மழை</u>

கடலூர் மாவட்டம் பெண்ணாடம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் பிற்பகலில் ஒரு மணி நேரம் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் திருமலைகளம் கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரது வீட்டு கூரை இடிந்து விழுந்து 3 பேர் காயமடைந்தனர். திண்டிவனம்

பகுதியில் நேற்று மாலை பெய்த மழையால் ரோடுகளில் வெள்ளம் தேங்கியது. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் சுற்றுவட்டார பகுதிகளில் மதியம் ஒரு மணி நேரம் மழை பெய்தது. மாலையில் ஊஞ்சலூர் சுற்றுவட்டாரத்தில் மழை கொட்டியது. கொடைக்கானலில் பகலில் ஒரு மணி நேரம் மழை பெய்தது. இதனால் சுற்றுலா பயணிகள் அவதிப்பட்டனர்.

மின்னல் தாக்கி பலி

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் நேற்று மாலை 5 மணி அளவில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. இதில் அந்த பகுதியில் குடை பிடித்தபடி ஆடு மேய்த்துக்கொண்டிருந்த பாலமுருகன் (வயது 23) என்பவர் மின்னல் தாக்கி இறந்தார். அவரது தந்தை காமராஜ் படுகாயம் அடைந்தார். இதில் 3 ஆடுகளும் செத்தன.